களம் காணும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் வெற்றி வேட்பாளர்களை ஆதரித்து

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் 2-ஆம் கட்ட தேர்தல் பிரச்சாரம்!

விருதுநகர் – திருமங்கலத்தில் இன்று உரையாற்றுகிறார்!

தமிழகம் முழுவதும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்கு சேகரித்து வருகிறார்.

இந்த தொடர் பிரச்சாரத்தை தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மார்ச் 31ஆம் தேதி திருவாரூரில் தொடங்கிய நிலையில், இரண்டாம் கட்ட பரப்புரையை ஏப்ரல் 3ஆம் தேதி திருநெல்வேலியில் தொடங்கினார்.

இன்று காலை விருதுநகரிலும், மாலையில் திருமங்கலத்திலும் நடைபெறும் மாபெரும் தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் கழகத் தலைவர் அவர்கள் உரையாற்றுகிறார்.

அருப்புக்கோட்டை,
விருதுநகர்

தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தேர்தல் சுற்றுப்பயண விவரம்

நேரம்	இடம்	கலந்து கொள்ளும் சட்டமன்றத் தொகுதிகள்
05.04.2026 (ஞாயிற்றுக்கிழமை)		
காலை 9 மணி	**விருதுநகர்** (பொதுக்கூட்டம்)	சாத்தூர், ராஜபாளையம், சிவகாசி, திருவில்லிபுத்தூர், திருச்சுழி, அருப்புக்கோட்டை, விருதுநகர்
மாலை 5 மணி	**திருமங்கலம்** (பொதுக்கூட்டம்)	மேலூர், மதுரை கிழக்கு, சோழவந்தான், மதுரை வடக்கு, மதுரை தெற்கு, மதுரை மத்தி, மதுரை மேற்கு, திருப்பரங்குன்றம், திருமங்கலம், உசிலம்பட்டி

குறிப்பு : கழகத் தலைவர் அவர்கள் மேற்குறிப்பிட்டுள்ள இடங்களில் பிரச்சாரத்திற்கு குறித்த நேரத்திற்குள் செல்ல வேண்டியுள்ளதால், காலத்தின் அருமை கருதி, எக்காரணம் கொண்டும் கழகத் தோழர்கள், வழியில் வேறு எவ்வித நிகழ்ச்சிகளையும் ஏற்பாடு செய்திட வேண்டாமென கண்டிப்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தலைமைக் கழகம்,
தி.மு.க.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18

வேலூர் மாவட்டம் – பொன்னையில் கழக அரசின் திட்டங்கள் - சாதனைகளைக் கூறி

அமைச்சர் - கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன் வாக்கு சேகரிப்பு!

மலர் தூவி - ஆரத்தி எடுத்து பெண்கள் வரவேற்பு!

வேலூர், ஏப்.5-

வேலூர் மாவட்டம் பொன்னை பகுதியில் கழக அரசுசெய்த திட்டங்கள் சாதனைகள் குறித்து எடுத்துரைத்து காட்பாடி தொகுதி தி.மு.க. வேட்பாளர் கழக பொதுச் செயலாளர் - அமைச்சர் துரைமுருகன் வாக்கு சேகரித்தார்.

அவருக்கு பூக்களைதூவியும் ஆரத்தி எடுத்தும் பெண்கள் வரவேற்பு கொடுத்தனர்.

வேலூர் மாவட்டம் காட்பாடி தொகுதியில் தி.மு.க. வேட்பாளராக கழகப் பொதுச் செயலாளர், அமைச்சர் துரைமுருகன் அவர்கள் மீண்டும் போட்டியிடுகிறார்.

அவர் காட்பாடி தொகுதிக்கு உட்பட்ட பொன்னை பகுதியில் அவுலரங்கபள்ளி, கோடலவாரி, பொன்னை பாலேகுப்பம் எஸ். என்.பாளையம், பொன்னை புதூர் கீரை சாத்து தீயார்குப்பம், உள்ளிட்ட 9 ஊராட்சிகளுக்கு உட்பட்ட கிராமங்களுக்குச் சென்று தி.மு.க. ஆட்சியின் போது அவர் செய்த சாதனைகளை எடுத்துக் கூறி தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

அப்போது வழிநெடுகிலும் பெண்கள் பூக்களை தூவியும், ஆரத்தி எடுத்தும் அவரை வரவேற்றனர்.பொன்னை அடுத்த கீரை சாத்து பகுதியில் இருந்த பெண்கள் அவரது வாகனத்தின் அருகே

வந்து தங்கள் கிராமத்திற்கு கடந்த மூன்று மாதங்களாக ஆற்காட்டில் இருந்து லாலாபேட்டை, கீரை சாத்து வழியாக பொன்னை வரை செல்லும் அரசு பஸ் இயக்கப்பட வில்லை. இப்போது மாணவ, மாணவிகளுக்கு முழு ஆண்டு தேர்வுகள் நடைபெற்று வருவதால் பள்ளிக்குச் செல்வதற்காக அவர்கள் சிரமப்படுவதாகவும் பஸ்சை இயக்க வேண்டும் எனவும் கோரிக்கை வைத்தனர்.

உடனடியாக போக்குவரத்து துறை அதிகாரிகளுக்கு தொலை பேசி வாயிலாக தொடர்புகொண்டு அந்த பஸ்சை இயக்கவேண்டும் என கேட்டுக் கொண்டார். பின்னர் நாளை முதலே இந்த பகுதிக்கு தொடர்ந்து பஸ் இயக்கப்படும் என வசதி ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறேன். கடந்த ஐந்து ஆண்டு கால தி.மு.க. ஆட்சியில் எண்ணற்ற திட்டங்களை பொதுமக்களுக்காக செய்துள்ளேன் என்று கூறினார்.

தொடர்ந்து பேசிய அவர் மகளிர் உரிமைத் தொகை, முதியோர் உரிமைத்தொகை புதுமைப்பெண் திட்டம், கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு லேப்டாப் வழங்கும் திட்டம், மகளிர்க்கு அரசு பஸ்களில் விடியல் பயணத்திட்டம் உள்பட தி.மு.க. ஆட்சியில் நிறைவேற்றப்பட்ட திட்டங்களை எடுத்துக் கூறிவாக்குச் சேகரித்தார்.

நிகழ்ச்சியில் வேலூர் வடக்கு மாவட்ட தி.மு.க. பொறுப்பாளர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம். கதிர்ஆனந்த், ஒன்றிய குழுத் தலைவர் வேல்முருகன், ஒன்றிய தி.மு.க. செயலாளர்கள் சி.ரவி, கே. கருணாகரன் பொன்னை ஊராட்சி மன்ற தலைவர் ரமேஷ் வள்ளி மலை ஊராட்சி மன்ற தலைவர் வாசுகி, கோட்டீஸ்வரன், பெருமாள் குப்பம் ஊராட்சி மன்ற தலைவர் கோட்டி, எருக்கம்பட்டி ஊராட்சி மன்ற தலைவர் கோமதி சுதாகர் மற்றும் தி.மு.க. நிர்வாகிகள் மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

நெரிசலில் சிக்கி பயணிகள் சுவாசிக்க முடியாத நிலை

UDAN திட்டம்: வளர்ச்சிக் கதையா? அல்லது ஒன்றிய அரசின் தோல்வியா?

மாநிலங்களவையில் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கேள்வி!

நாமக்கல், ஏப். 5-

UDAN திட்டத்தின் செயல்பாடு மற்றும் TierII, TierIII நகரங்களில் அதிகரித்து வரும் விமான நிலைய நெரிசல் குறித்தும், விமான கட்டணம் குறையும் என சொன்ன அரசு நெரிசலில் சிக்கி பயணிகள் சுவாசிக்க முடியாத நிலையால் UDAN திட்டம்: வளர்ச்சி கதையா? அல்லது ஒன்றிய அரசின் தோல்வியா? என நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் மாநிலங்களவையில் கேள்வி எழுப்பினார்.

2025-26 ஆம் ஆண்டில் UDAN திட்டத்தின் கீழ் ஹெலிபோர்ட்கள் மற்றும் நீர்வழி விமான தரிப்பிடங்கள் முழுமையாக செயல்படுத்தப்படாததற்கான காரணங்கள் என்ன? நிலம் கையகப்படுத்தல் மற்றும் சுற்றுச்சூழல் அனுமதி தாமதங்களை சரிசெய்ய அரசு நிர்ணயித்த காலக்கெடு என்ன?

மேலும், TierII மற்றும் TierIII நகரங்களில் உள்ள முக்கிய விமான நிலையங்கள் 85% முதல் 120% வரை தங்களின் திறனை மீறி செயல்பட்டு பயணிகள் நெரிசல் அதிகரித்துள்ளது உண்மையா? என எழுப்பினார். அத்துடன், "விமான சொத்து உரிமைகள் பாதுகாப்பு சட்டம், 2025" செயல்பாடு என்ன நிலையில் உள்ளது? இந்தச்

சட்டம் அமல்படுத்தப்பட்டதிலிருந்து விமான நிறுவனங்களின் குத்தகைச் செலவுகளில் ஏற்பட்ட மாற்றங்கள் என்ன? விமான கட்டணம் குறையும் என சொன்ன அரசு, விமான நிலையங்களில் நெரிசலில் சிக்கி பயணிகள் சுவாசிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. UDAN திட்டம்: வளர்ச்சி கதையா? அல்லது ஒன்றிய அரசின் தோல்வியா?, சிறிய நகரங்களில் உள்ள விமான சரக்கு நிலையங்களுக்கு 2026-27 ஆம் ஆண்டிற்கான CCRC நிதி உதவி விவரங்களையும் விளக்குமாறு கேட்டுக் கொண்டார்.

இதற்கு பதிலளித்த சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சகத்தின் இணை அமைச்சர் முரளிதர் மோகோல், 2025-26 ஆம் ஆண்டில் UDAN திட்டத்தின் கீழ் அமராவதி, தாதியா, பூர்னியா, ரெக்காங் பேயோ மற்றும் சஞ்சோலி உள்ளிட்ட 5 விமான நிலையங்கள் மற்றும் 38 விமானப் பாதைகள் செயல்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

விமான நிலையங்களில் பயணிகள் வரத்து கால நிலை, திருவிழா மற்றும் விடுமுறை காலங்களைப் பொறுத்து மாறுபடும் என்றும், உச்ச நேரங்களில் தற் காலிக நெரிசல் ஏற்படுவது இயல்பானது என்றும் அவர் கூறினார்.

அதே நேரத்தில், பயணிகள் வசதிக்காக விமான நிலைய நிர்வாகங்கள் தொடர்ந்து கண்காணிப்பு மற்றும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன என்றும் விளக்கினார்.

மேலும், "விமான சொத்து உரிமைகள் பாதுகாப்பு சட்டம், 2025" தொடர்பான விதிமுறைகள் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும், இதன் மூலம் விமான குத்தகைச் செலவுகள் 8% முதல் 10% வரை குறைய வாய்ப்பு உள்ளதாகவும் தெரிவித்தார்.

இது விமான சேவைகளில் போட்டியை அதிகரித்து, பயணிகள் மற்றும் சரக்கு கட்டணங்களை குறைக்கும் என்றும் அவர் கூறினார்.

இதனுடன், 2026-27 நிதியாண்டிற்காக AAICLAS நிறுவனத்தின் சர்வதேச சரக்கு சேவைகளை ஆதரிக்க ரூ.30.33 கோடி CCRC நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.